**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**ஐ.டி.ஓ.பி. எண். 74/2025**

**எ.ம.சா. 1**

நாள்: 16.03.2026.

2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 16ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஜோஸ் மிஸ்ரா | தொழில் | |
| தந்தை பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலுகா | | | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் எதிர்மனுதாரர். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ.எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | | எ.ம.சா.ஆ.1 | எனது ஆதார் அட்டை | ஜெராக்ஸ் நகல் |
| 2) | 16.05.2024 | எ.ம.சா.ஆ.2 | நான் மனுதாரர் மீது இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாருக்கு அவர்கள் வழங்கிய ரசீது | ஜெராக்ஸ் நகல் |
| 3) | 17.01.2025 | எ.ம.சா.ஆ.3 | நான் மனுதாரர் மீது இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் | ஜெராக்ஸ் நகல் |



MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 15:59:10 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிலையத்தில் அளித்த புகாருக்கு அவர்கள் வழங்கிய ரசீது | |
| 4) | 10.01.2025 | எ.ம.சா.ஆ.4 | நான் மனுதாரர் மீது இராமேஸ்வரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகார் மனு | ஜெராக்ஸ் நகல் |

<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொன்னவைதான் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எங்களது திருமணத்தின்போது வரதட்சணை பற்றி எதுவும் பேசவில்லை என்றால் சரியல்ல, பேசினார்கள். திருமணத்தின்போது மனுதாரர் தரப்பில் எனக்கு 4 3/4 பவுன் தாலி செயினும், 2 ¾ பவுன் தங்க செயினும் போடப்பட்டது என்றால் சரியல்ல. திருமணத்தின்போது எனது சித்திக்கு மனுதாரரிடம் இருந்து ரொக்க பணம் ரூ.50,000/- கொடுத்தார் என்றால் சரியல்ல. மனுதாரருடன் பிறந்தவர்கள் மொத்தம் 13 பேர். அதில் 7 ஆண்கள், 5 பெண்கள். எங்கள் திருமணத்தின்போது, அந்த 5 பெண்களும் திருணம் ஆகி சென்று இருந்தார்கள் என்றால் இல்லை. மனுதாரரின் ஒரு அக்கா திருமணமாகி வீட்டிலேயே இருந்தார். திருமணத்தின்போது மனுதாரர் என்ன வேலை செய்து வந்தார் என்றால் வெளிநாட்டில் கடல்தொழில் செய்து வந்தார். அவர் திருமணமாகி இரண்டே மாதத்தில் வெளிநாட்டிற்கு சென்றுவிட்டார்.

எனது நிரூபண வாக்குமூலத்தில் 4 வது பத்தியில் சொல்லியுள்ள விவரங்களை நிரூபிக்க ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 10 வது பத்தியில் நான் விவாகரத்து வழங்குவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வேறு ஒரு நபருடன் பழக்கம் உள்ளதால்தான், அவ்வாறு விவாகரத்து வழங்க ஒத்துக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மனுவில் கூறியது போன்று



MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 15:59:13 +0530

திருமணத்தின்போது, நகைகள் மற்றும் பணம் எதுவும் கொண்டுவரவில்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு விவாகரத்து வழங்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.16 15:59:16 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .